உ

கடவுள் துணை

பதினேழாவது

# அகஸ்திய மகாமுனிவர்

## சஞ்சீவியெண்ணெய்

# மேகத்தெண்ணெய் — 5

பூரணமாய்ச்செப்புகிறேன் புலத்தியாகேள்
புகழ்பெரியநாதாக்கள் பாதம்போற்றி
காரணமாமேகத்துக் கெண்ணெய்கேளு
கருதுகிறேன் கடுக்காயு மிஞ்சிசுக்கு
சீரணமாஞ்சீரகம் நிலவேம்புப்பட்டை
சிறந்ததொருபறங்கிச்சக்கை மிளகுமாகும்
தாரணியில்வெந்தயமும் நெல்லிமுள்ளி
தப்பாமற்கோஷ்டமுட னதிமதுரஞ்சேரே. 1

சேரேநீ திணுசுபல மொன்றுவாங்கு
சிற்றாண்டமெண்ணெய்படி யொன்றுகேளு
காரேநீகாராவின் பால்படியுமாகும்
கற்றாழைச்சாறுபடி கலந்துவாரு
சீரேநீசெவ்வல்லி சாறுபடியொன்று
செவ்விளநீர்படியொன்று செயலாய்வாங்கு

பாரேசிவாளமது வளைமுக்கால்தான்
பாங்குடனே சாக்கெல்லா மரைத்துக்கொள்ளே.

கொள்ளவே யெண்ணெயுடன் குழப்பிக்கொண்டு
குணமுடனே மேற்கண்ட பாலுஞ்சாறுந்
தள்ளாமற் சட்டியிட்டு மடுப்பேற்றிக்கொள்ளு
தயவுடனே நீயெரித்துச் சண்டக்காச்சு
மெள்ளவே மெழுகுபத மாகும்போது
மேனியுடனிறுத்துவிடு மெய்தான்சொன்னேன்
கள்ளமனதில்லாமல் வடுவனுக்கு
கருத்துடனே பூசிப்பாய்க் கருதுவோமே. 3

கருதுவாவுச்சிநல்லக் காண்டியப்பா
கண்மணியே காலையிலே மண்டலமேகொள்ள
மருகுவாயப்படியே மண்டலமேகொள்ள
மயங்குமடா மேகமென்ற யிருபத்தொன்றும்
பெரும்பாடு சூலையுடன் பாதவாதம்
பறக்குமடா ஓலோகோ பாருபாரு
இருக்குமென்றயின் னும்வெகு ரோகமெல்லாம்
யென்சொல்லவேனேகுமடா பின்னாங்கேளே. 4

கேளப்பா பத்தியமோ புளிபுகையுமாகா
கெடியான போகமுடன் கடுகுநல்லெண்ணெயாகா

ஞாளப்பா பூசினிக்கா யகத்திதள்ளு
சுந்தரமேபூவுலகும் புகழுவேதான்
காளப்பாவுறுதியுடன் கொண்டபேர்க்கு
காடாதுபீடையென்ற கன்மம்போகும்
பாரப்பாஒன்றுமில்லை பகரக்கேளு
பத்திமுத்திநித்தியமுஞ் சித்தியாமே. 5

அகஸ்தியர் சஞ்சீவி வெண்ணெய்
மேகத்தெண்ணெய்-5
முற்றிற்று.

உ

சிவமயம்

பதினெட்டாவது

## அகஸ்திய மகாமுனிவர்

# குளிர்ச்சி யெண்ணெய்—5

---

உண்மையாயுரைக்கிறேன் புலத்தியாகேள்
 உலகமதிற்பண்டிதர்க்கு வுதவியாக
வண்மையாய்ச்சர்வ ரோகங்களும்
 வளமானசித்தரண்டை யெண்ணெய்வாங்கு
பண்பாகபடியொன்று பாலகினையாகும்
 பருவமாய்வெள்ளருகு படிசாறாகும்
தன்மையுடன்குமரிச்சார் படியுமாகுந்
 ததியுடனே ஆவின்பால் படியுந்தாக்கே. 1
தாக்கவேவல்லாரை சார்படியுமாகும்
 தாளிச்சார்படியதனை வாங்கு மைந்தா
ஆர்க்கவே அத்திப்பால் படியுமாகும்
 அதின்கூட பூவரசன் பட்டைச்சாறு
கார்க்கவேசாறுபடி காலதாகும்
 கருத்துடனே முள்ளங்கிப்படிசாறாகும்
மார்க்கமுள்ளகோஷ்டமுடன் மதுரமாகும்
 மகத்தானசரக்கினுட வகையுமாமே. 2
மாமேரீ திரிகடுகு சடாமாஞ்சியாகும்
 மாறுமற்சீரகமோ டொக்கச்சேரு

சிவமயம்

பதினெட்டாவது

அகஸ்திய மகாமுனிவர்

# குளிர்ச்சி யெண்ணெய்—5

உண்மையாயுரைக்கிறேன் புலத்தியாகேள்
    உலகமதிற்பண்டிதர்க்கு வுதவியாக
வண்மையாய்ச்சர்வரோகங்களும்
    வளமானசித்தரண்டை யெண்ணெய்வாங்கு
பண்பாகப்படியொன்று பாலைகீரையாகும்
    பருவமாய்வெள்ளறுகு படிசாறாகும்
தன்மையுடன்குமரிச்சார் படியுமாகுந்
    திரிபுடனே ஆவின்பால் படியுந்தாக்கே. 1
தாக்கவேவல்லாரை சார்படியுமாகும்
    தாளிச்சார்படியதனை வாலுமைந்தா
ஆர்க்கவேஅத்திப்பால் படியுமாகும்
    அதின்கூடபூவாரன் பட்டைச்சாறு
கார்க்கவேசாறுபடி காலதாகும்
    கருத்துடனே முள்ளங்கிப்படிசாறாகும்
மார்க்கமுள்ளகோஷ்டமுடன் மதுரமாகும்
    மகத்தானசாரக்கிஇட வகையுமாமே. 2
மாமேரிதிரிகடுகு சடாமாஞ்சியாகும்
    மாறுமற்சீரகமோ டொக்கச்சேரு

சூளப்பா பூசினிக்கா யகத்திதள்ளு
சுந்தரமேபூவுலகும் புகழுமேதான்
காளப்பாவுறுதியுடன் கொண்டபேர்க்கு
காடாதுபீடையென்ற கன்மம்போகும்
பாரப்பாவொன்றுமில்லை பகரக்கேளு
பத்திமுத்திநித்தியமுஞ் சித்தியாமே. 5

## அகஸ்தியர் சஞ்சீவி யெண்ணெய்
## மேகத்தெண்ணெய்-5
## முற்றிற்று.

உ

சிவமயம்

ஸ்ரீ குருபதாவது

அகஸ்திய மகாமுனிவர்

# மேகத்தெண்ணெய்—14

எண்ணெய்கேள் மிளகருணை வெள்ளைச்சாரணைவேர்
யிதமான முந்திரிவேர் முருங்கைவேம்பு
தண்ணைவேருமரியொடு வல்லிசிந்தி
சலந்திரட்டிக்கரிசாலை பொன்னாங்காணி
விண்ணாவே அமுக்கிரா சங்கங்குப்பி
வெள்ளீன்றுபிர்ப்பூலா விழுதியோடு
திண்ணமாம்பிலைப்பனைவேர் அழிஞ்சிப்பட்டை
சிறுவிளாவெள்ளறுகு வல்லாரையாமே. 1

ஆவாரைமூடக்கத்தான் அகத்தியோடு
அப்பனைவகைக்கு பலந்தானிரண்டு
ஆரையாம்ஆவாரை சமூலங்கொண்டு
அழகாயிடித்திடுவாய் பலமோபத்து
சேரவேயொன்றாக யிடித்துநன்றாய்
சேர்த்துவொருதாளியிலே ஜலந்தான்கேளு

வேரையாஞ்சீரகம் பலந்தானெட்டு
வெந்தியமோபலந்தானு மெட்டுபோடே. 2

போட்டுமேஅவைநன்றாய் கரைத்துக்கொண்டு
பொங்குடன்பதினாறுபடி ஜலந்தான்வாரு
ஆட்டியேவடுப்பேற்றி யாறப்போடு
அழகானஇயாழந்தான் குறைவுகண்டு
இட்டியேகுழந்தாய்நீ செப்பக்கேளு
சித்தாண்டமெண்ணைபடி யிரண்டுவாரு
காட்டியேயிருள்ளிச்சார் படியிரண்டுவாரு
காராவின்படியிரண்டு கல்லுரெட்டே. 3

எட்டான கல்லுரு வஸ்திரகாயம்
இதமாகச்செய்ததிலே போடுபோடு
மட்டான ராயபுரிச் சக்கரைதானெட்டு
வாகாகப்போட்டதிலே காச்சுகாச்சு
யிஷ்டமாம்பாலோடு இயாழும்வற்ற
யெண்ணெயதை மெழுகுபதமாகக்கண்டு
தட்டியேகாகத்தோடி றக்கியாற்றி
சாடியிட்டுமூடிதான் ரவிபுடமேவையே. 4

வைத்துமேபட்சமொன்றும் கழித்தபோங்கி
மைந்தனேநாளொன்றுக் கோர்கரண்டி

உற்றமேதினந்தோறுங் கொண்டாயானால்
ஓடுகிறநோயைநீ யுற்றுக்கேளு
மெத்தவேதாருமேகங்க ளிரண்டுபத்து
மேலானகிரந்தியரை யாப்புகுஷ்டம்
சத்தவேதாருஅஸ்திசுரம் அஸ்திவெட்டை
காப்பனுஞ்சிரங்குசொறி மேகம்போமே. 5

மேகமொடுநால்வகையாம் பிறகுரூங்கள்
வெண்குஷ்டம்படர்தாமரை மேகவூரல்
மேகமாம்பித்தவாய்வு ஊஷ்ணவாய்வு
மெய்யெரிவுகாலெரிவு காந்தல்போகும்
மேகவாம்வாயுவொடு அண்டவாதம்
மெல்லியர்க்கு கெர்ப்பநோயுந்தீரும்
மேகமாமலடிக்குப் பிள்ளையுண்டாம்
விருதானவைத்தியரே விரைந்துபாரே. 6

பாரேயெண்ணெய்க்கு பத்தியமேயில்லை
பரிவானபெரியோர்க்குஞ் சிறியோர்க்குமாகும்
பாரேநீபுவிமீதில் பாவிடர்க்கு
பாங்குடனேவியாதிகண்டாற் குறியைப்பாரு
பாரேநீ இவர்களுக்கு யெண்ணெயீவாய்
பாலகனேபொருளாசை நீவையாதே

பாரேநீபுலத்தியனே ஐயாகேளு
பண்டிதங்களறிந்துநீ பகர்ந்திடாயே. 7

இருவுமது

சீராகபுலத்தியனே செப்பக்கேளு
சிவசிவா மேகத்துக்கா தியெண்ணெய்
தாரானசித்தண்ட மெண்ணெய்படியொன்று
தார்குழலாள் முலைப்பா லைப்படியுமாகும்
போரானபுலத்தியனே பெருமைமெத்த
பேருலகிற்செப்பாதே பேணிப்பாரு
கூரானஅத்திப்பால் படியுமாகும்
குணமுடனே சாறுவகை கூறக்கேளே. 8

கேளப்பாவிழுதிச்சார் படியுமாகும்
கெடியானகுமரிச்சார் படியுமாகும்
வாளப்பாவல்லாரைச் சார்படியுமாகும்
வான்குவாயிளநீரு படிதானப்பா
நாளப்பாநன்னாரிச்சார் படியுமாகும்
நறுந்தாளிசாறுபடி யரைதான்கேளு
சூளப்பாகுமட்டிச்சார் படியரையுமாகும்
சுந்தரமேசாக்குவகை செப்புவேனே. 9

செப்புகிறேன் திரிகடுகு திரிபலாதி
சிறப்பானசீரகமுங் கொத்துமல்லி
கொப்பிதமாய்கோஷ்டமுடனதிமதூரங்
கொண்டதொருகடுகுரோகணியுங்கூட்டு
வப்பனே தினுசுக்கு வைந்துபலமுஞ்சேரு
பன்பார்கவாளபிகு பலந்தானவாங்கே. 10

வாங்கியேயிளநீரால் மைபோலாட்டி
வகையுடனே மேற்கண்ட பாலுஞ்சாறும்
பாங்கமாயெண்ணெயுமே சேரவார்த்து
பாலகனே மருந்தையெல்லாங் குழப்பிக்கொண்டு
சிங்காரபாண்டத்தில் விட்டுமைந்தா
சிவசிவாவடுப்பேற்றி யெரிப்பாய்தானே. 11

தாவென்றமறுபாண்ட மிறுத்துக்கொண்டு
தன்மமாந்திரை முச்சி காலடி தானும்
வேவென்றகாலையிலே உள்ளுக்குக்கொள்ளு
விரண்டோடேழுபத்து நாளதாகும்
காவென்றபுளிபுகையுந் தள்ளுதள்ளு
கடினமாம்போகத்தை நீக்கிடாதே
பாவென்றபத்தியமோ பிச்சாபத்தியம்
பரிவாகும்வியாதிகளைப் பகருவேனே. 12

பகருவேன் கருமேக சருகுஷ்டங்கள்
பாண்டுடனே வாதமென்ற பக்கசூலை
வேகமென்றபித்தமுடன் வாய்வுபோகும்
வெகுசுருக்குபடர்மேகஞ் சிரங்குபோகும்
வானென்றனைஞ்சுழ மற்றுப்போகும்
வப்பனேசெற்பனோ யெல்லாந்தீரும்
சோமமென்றகாமாலை யெலும்புருக்கி
சுத்தமாய்ப்பறக்குமடா குன்மம்போமே. 13

போமேதான் கூறிட்ட வியாதியெல்லாம்
பொல்லாதசன்னிவகை போகும்போகும்
தாமேநீகுளிக்குமுன் தானறிந்து
தாரணியிற்பண்டிதங்கள் செய்யவேணும்
வேதமங்கள்செய்யாமல் றூண்பின்னாக
விருப்பமாய்வழிதங்க ளியவேணும்
மாமதங்கள்பொழிபுமப்பா மருங்குசொன்னேன்
மன்மதன்போலுருண்டு மாபலமுமுண்டு
ஆமேதான்புலத்தியனே அறிவாய்ச்சொன்னேன்
அகண்டபரிபூரணமா யருளுவோமே. 14

அகஸ்தியர் மேகத்தெண்ணைய்-14

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# விஷ்ணு சக்கரம்

ஆதிவிந்துசாதிலிங்க மானதொருணையுரியும்
சோதிமூலாதாரமூர் துலங்குகாந்தமேஞ்சிலை
நீதிலிம்பச்சாறுவிட்டு நெருங்குன்றிநேரிடை
பாதிமேனியாயிருந்த பாரளந்தசக்கரம்.

சக்கரத்திலோர்மணி தனித்திரிகடுகுடன்
மிக்கதேகனிவிஞ்சிசாற்றில் நெருங்குன்றிநேரிடை
பக்கசூலைமிக்கவாயு பத்துமூன்றுசன்னியும்
மிக்கநோயமானதுந் தரிப்பதங்குமில்லையே.

விஷ்ணு சக்கரம்

முற்றிற்று.